www.kalviexpress.in www.kalviexpress.in

இத்தற்காலிக விடைக்குறியீடுகளில் ஏதேனும் மாற்றம் தெரிவிக்க விரும்பினால் 27.10.2023-ற்குள் dgedsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உரிய ஆதாரத்துடன் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

கால அளவு : 2 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கானது)

## தேர்வு எழுதுபவர்களுக்கான அறிவுரைகள்

வினாத் தொகுப்பைத் திறப்பதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. இவ்வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டது.
2. அச்சுப் பதிவில் ஏதேனும் குறையிருப்பின், உடனடியாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
4. விடைகளை **OMR** விடைத்தாளில் குறிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளிலிருந்து சரியான விடையினைக் கண்டறிந்து அதனை **OMR** விடைத்தாளில் உரிய வட்டத்தில் கருப்பு நிறப் பந்துமுனைப் பேனாவினால் நிழலிட (Shading) வேண்டும். '✓' மற்றும் '✖' ஆகிய குறியீடுகளை **OMR** விடைத்தாளில் குறிக்கக் கூடாது.
6. விடைகளைக் கண்டறிய மேற்கொள்ளும் வழிமுறைகளை வினாத்தொகுப்பின் கடைசியில் அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பக்கத்தில் செய்து கொள்ளலாம். **OMR** விடைத்தாளிலோ அல்லது தனித்தாளிலோ செய்யக்கூடாது.
7. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பையோ அல்லது **OMR** விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.
8. தேர்வு முடிந்த பிறகு **OMR** விடைத்தாளை மட்டும் அறைக்கண்காணிப்பாளரிடம் கொடுக்கவும். வினாத்தொகுப்பைத் தேர்வர் எடுத்துச் செல்லலாம்.
9. ஏதேனும் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏழு இலக்கப் பதிவெண்ணைத் தவிராமல் குறிப்பிடவும்.

**பக்கத்தைத் திருப்பிப் பதிலளிக்கத் தொடங்கவும்.**

**P.T.O.**

Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

www.kalviexpress.in



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

www.kalviexpress.in www.kalviexpress.in

1. 'மழையும் புயலும்' என்னும் நூலின் ஆசிரியர் :

(அ) மு. வரதராசனார் (ஆ) இரா.பி. சேது

(இ) ப. ஜீவானந்தம் (ஈ) வ. இராமசாமி

2. பொருந்தாத இணையைத் தேர்க.

(அ) பீடு - இழிவு (ஆ) விசும்பு - வானம்

(இ) ஊழி - யுகம் (ஈ) ஊழ் - முறை

3. இலக்கணக் கட்டுக்கோப்பு குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருக்கும் பாவகையைத் தேர்க.

(அ) வெண்பா (ஆ) அகவற்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

4. 'கடுங்காற்று, மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது' என்று காற்றின் வேகத்தைக் குறிப்பிடுபவர் :

(அ) குடபுலவியனார் (ஆ) ஐயூர்முடவனார்

(இ) வெண்ணிக் குயத்தியார் (ஈ) மதுரை இளநாகனார்

5. ''மாசற விசித்த வார்புறு வள்பின்''
- இவ்வரி இடம் பெற்றுள்ள நூல் :

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு (இ) ஏலாதி (ஈ) கார் நாற்பது

6. ''ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு'' - இப்பாடலடிகளில் பயின்று வந்துள்ள பொருள்கோள் வகை :

(அ) நிரல்நிறைப் பொருள்கோள்

(ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்

(ஈ) தாப்பிசைப் பொருள்கோள்

7. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | தேடித்தேடி | (i) | வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| (2) | அழுத குழந்தை | (ii) | வினைமுற்றுத் தொடர் |
| (3) | வளர்ந்தது தமிழ் | (iii) | பெயரெச்சத் தொடர் |
| (4) | ஊரின்கண் நீங்கினார் | (iv) | அடுக்குத் தொடர் |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(ஈ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

8. நற்சொல் கேட்க தெய்வத்திற்குக் கொண்டுவந்த பொருட்களாக நப்பூதனார் கூறுபவை :

(அ) தேங்காய், பழம் (ஆ) நெல், முல்லைப்பூ

(இ) கற்பூரம், ஊதுபத்தி (ஈ) நெல், பழம்

9. 'உண்டோம்' என்ற பகுபதத்தில் 'ஓம்' என்னும் விகுதி :

(அ) தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

(ஆ) தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

(இ) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

(ஈ) முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

10. சௌம்ய நாராயணன் திருக்கோவில் அமைந்துள்ள இடம் :

(அ) திருப்பாதிரிப் புலியூர் (ஆ) திருவெறும்பூர்

(இ) திருக்கோட்டியூர் (ஈ) திருநின்றவூர்

11. திருத்தணிகையுலா கூறும் ஐம்பெறுங்காப்பிய முறை வைப்பு :

(அ) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

(ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி

(இ) சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம், மணிமேகலை

(ஈ) சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

12. இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக் கொள்ளப்படுவது :

(அ) வழா நிலை (ஆ) கால வழுவமைதி

(இ) வழுவமைதி (ஈ) வழுநிலை

13. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | அரும்பு | (i) | பூ விரியத் தொடங்கும் நிலை |
| (2) | போது | (ii) | மரம், செடியினின்று பூ கீழே விழுந்த நிலை |
| (3) | வீ | (iii) | பூ வாடின நிலை |
| (4) | செம்மல் | (iv) | பூவின் தோற்றநிலை |

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

(இ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(ஈ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

14. "மா தவி வேலிப் பூக வனம்தொ றும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே"
- என்ற கம்பரின் வரிகளில் உயிரென சுட்டப்படுவது :

(அ) சரயு ஆறு (ஆ) கங்கை ஆறு
(இ) பிரம்மபுத்திரா ஆறு (ஈ) கோதாவரி ஆறு

15. "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"
- இப்பாடல் அடிகளில் இடம் பெற்றுள்ள அணி :

(அ) நிரல் நிறை அணி (ஆ) தன்மையணி
(இ) தற்குறிப்பேற்ற அணி (ஈ) தீவக அணி

16. கரிசல் எழுத்தாளர்களில் மூத்தவர் :

(அ) கி. இராஜ நாராயணன் (ஆ) கு. அழகிரிசாமி
(இ) சா. கந்தசாமி (ஈ) பூமணி

17. வட இந்தியப் பெருங்கடலில் உருவான புயல்காற்றிற்கு தாய்லாந்து சூட்டிய பெயர் :

(அ) பெய்ட்டி (ஆ) கஜா (இ) பிஜ்லி (ஈ) ஜல்

18. கைமுறை - இலக்கணக் குறிப்பு தருக.

(அ) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(ஆ) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(இ) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
(ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

19. இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கவிதைத் தொகுப்பு நூலான கீதாஞ்சலி எம்மொழியில் மொழிபெயர்த்தமைக்கு அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது ?

(அ) வங்க மொழி (ஆ) ஜப்பானிய மொழி
(இ) ஆங்கில மொழி (ஈ) பிரெஞ்சு மொழி



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

20. 'சந்தாசாகிப்' மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டவர் :

(அ) கால்டுவெல் (ஆ) ஹிராஸ் பாதிரியார்

(இ) கா.ப. செய்கு தம்பிப் பாவலர் (ஈ) கான்சுடான்சு சோசப் பெசுகி

21. உழிஞை, தும்பை - ஆகிய புறத்திணைகளின் போர்ச் செயல்கள் முறையே :

(அ) கோட்டையைக் காத்தல், மாற்றரசனோடு போரிடல்

(ஆ) மாற்றரசனோடு போரிடல், நிரை மீட்டல்

(இ) நிரை மீட்டல், மாற்றரசனோடு போரிடல்

(ஈ) கோட்டையைச் சுற்றி வளைத்தல், வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடல்

22. 'குட்டி இளவரசன்' என்னும் தமிழ் நூலின் ஆசிரியர் :

(அ) வெ. ஸ்ரீராம் (ஆ) எம்.பி. அகிலா

(இ) வல்லிக் கண்ணன் (ஈ) அழ. வள்ளியப்பா

23. பெண்பாற் பிள்ளைத் தமிழின் கடைசி மூன்று பருவங்கள் :

(அ) சிற்றில், சிறுபறை, சிறுதேர் (ஆ) காப்பு, செங்கீரை, தால்

(இ) கழங்கு, அம்மானை, ஊசல் (ஈ) முத்தம், வருகை, அம்புலி

24. 'மார்கழித் திங்கள்' - இலக்கணக் குறிப்பைத் தேர்க.

(அ) அன்மொழித் தொகை (ஆ) இருபெயரொட்டுப் பண்புத் தொகை

(இ) உம்மைத் தொகை (ஈ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

25. தெருக்கூத்து கலையில் 'அருச்சுனன் தபசு' நிகழ்த்தப்படுவதற்கான காரணம் :

(அ) வெற்றி வேண்டி (ஆ) இறையருள் வேண்டி

(இ) மழை வேண்டி (ஈ) பாதுகாப்பு வேண்டி

26. "ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!"

- இதில் அவனும் யானும் என்பது :

(அ) மனிதனும் கடவுளும் (ஆ) நண்பனும் கவிஞனும்

(இ) தலைவனும் தலைவியும் (ஈ) கடவுளும் கவிஞனும்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

27. சிங்கம் <u>மாமிசத்தை</u> உண்ணும் போது, எலும்பு அதன் <u>மேல்வாயில்</u> குத்தியது.

அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான சொற்களைத் தேர்க.

(அ) ஊண், அண்ணம் (ஆ) ஊன், அன்னம்

(இ) ஊன், அண்ணம் (ஈ) ஊண், அன்னம்

28. 'சுடுமண் சிலைகள்' என்னும் குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றவர் :

(அ) சா. கந்தசாமி (ஆ) கி. ராஜநாராயணன்

(இ) ராஜம் கிருஷ்ணன் (ஈ) ஜெயகாந்தன்

29. கூர்மபுராணம் என்ற நூலை இயற்றியவர் :

(அ) செண்பகப் பாண்டியன் (ஆ) வரகுணப் பாண்டியன்

(இ) அதிவீரராம பாண்டியர் (ஈ) சற்குணப் பாண்டியன்

30. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய

கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் காணும் நயங்களைத் தேர்க.

(அ) எதுகை, இயைபு (ஆ) மோனை, இயைபு

(இ) இயைபு, முரண் (ஈ) மோனை, எதுகை

31. சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது மற்றும் சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது பெற்று பெண்குலத்திற்கு பெருமை சேர்த்தவர் :

(அ) ராஜம் கிருஷ்ணன் (ஆ) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

(இ) எம்.எஸ். சுப்புலட்சுமி (ஈ) பாலசரஸ்வதி

32. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழா துஞற்று பவர் - இக்குறட்பா இடம்பெற்றுள்ள அதிகாரம் :

(அ) மெய் உணர்தல் (ஆ) பெரியாரைத் துணைக்கோடல்

(இ) ஆள்வினை உடைமை (ஈ) குடிசெயல் வகை



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

33. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | படாஅ | (i) | சொல்லிசை அளபெடை |
| (2) | உரனசைஇ | (ii) | ஒற்றளபெடை |
| (3) | எடுப்பதூஉம் | (iii) | செய்யுளிசை அளபெடை |
| (4) | எஃஃகிலங்கிய | (iv) | இன்னிசை அளபெடை |

(அ) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(ஆ) (1)-(ii), (2)-(i), (3)-(iii), (4)-(iv)

(இ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

34. கூற்று - 1 : கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது.
கூற்று - 2 : கருந்துளை என்பது உண்மையில் கருப்பாக இருக்கும்.

(அ) கூற்று-1 சரி, கூற்று-2 தவறு

(ஆ) கூற்று-1 தவறு, கூற்று-2 சரி

(இ) கூற்று-1, 2 இரண்டும் சரி

(ஈ) கூற்று-1, 2 இரண்டும் தவறு

35. கூலவீதி என்பது :

(அ) குப்பைகள் நிறைந்த வீதி (ஆ) மலர்கள் நிறைந்த வீதி

(இ) தானியங்கள் நிறைந்த வீதி (ஈ) மக்கள் கூட்டமாக வாழும் வீதி

36. பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளைத் தேர்க.

(i) எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகும்.

(ii) வினைத்தொகையில் வல்லினம் மிகும்.

(iii) பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.

(iv) விளித்தொடரில் வல்லினம் மிகாது.

(அ) (i) மற்றும் (iv) (ஆ) (iii) மற்றும் (iv) (இ) (i) மற்றும் (iii) (ஈ) (i) மற்றும் (ii)

37. 'காவடியாட்டம்' - இச்சொல்லில் கா என்னும் வேர்ச்சொல் தரும் பொருள் :

(அ) பாரந்தாங்கும் கோல் (ஆ) காவல்

(இ) சோலை (ஈ) கருணை



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

38. கீழ்க்காணும் படத்திற்கு பொருத்தமான குறளைத் தேர்க.



(அ) வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(ஆ) குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

(இ) கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

(ஈ) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

39. பொருந்தாத ஒன்றனைத் தேர்க.

(அ) கேட்க வேண்டிய பாடல் (ஆ) சொல்லத்தக்க செய்தி
(இ) ஆடிப்பாடி மகிழ்ந்தனர் (ஈ) எழுந்து நின்ற மாணவன்

40. பிரெஞ்சு மொழியில் வந்த காந்தியின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழாக்கம் செய்தவர் :

(அ) கண. முத்தையா (ஆ) குப்புசாமி
(இ) அசோகமித்ரன் (ஈ) ஜெயகாந்தன்

41. பொருந்தாத இணையைத் தேர்க.

(அ) வயிரியம் - கூத்தர் (ஆ) படுகர் - பாணர்
(இ) அசைஇ - இளைப்பாறி (ஈ) ஆரி - அருமை



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

www.kalviexpress.in www.kalviexpress.in

42. 'இன்மை புகுத்தி விடும்' - இவ்வடிகளுக்குப் பொருந்தும் வாய்பாடு வரிசை :

(அ) தேமா புளிமா மலர் (ஆ) தேமா புளிமா காசு

(இ) புளிமா கூவிளம் நாள் (ஈ) புளிமா தேமா பிறப்பு

43. "தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே" என்று பாடியவர் :

(அ) பட்டினத்தார் (ஆ) வாணிதாசன்

(இ) அப்துல் ரகுமான் (ஈ) கா. நமச்சிவாயர்

44. கவிஞர் உமாமகேஸ்வரி படைப்புகளில் அல்லாத ஒன்று :

(அ) நட்சத்திரங்களின் நடுவே (ஆ) கற்பாவை

(இ) வெறும்பொழுது (ஈ) மீட்சி விண்ணப்பம்

45. 'தணிந்தது' - இப்பகுபதத்தில் இடம் பெற்றுள்ள சாரியையைத் தேர்க.

(அ) து (ஆ) த் (இ) தணி (ஈ) அ

46. "வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது" என்று கூறியவர் :

(அ) ஐன்ஸ்டைன் (ஆ) ஸ்டீபன் ஹாக்கிங்

(இ) தாமஸ் ஆல்வா எடிசன் (ஈ) ஐசக் நியூட்டன்

47. "கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"

- இவ்வடிகளில் இடம்பெறும் கறங்கு என்னும் சொல்லின் பொருள் :

(அ) கயிறு (ஆ) வில் (இ) வாள் (ஈ) காற்றாடி

48. 'என்னுடன் ஊருக்கு வருவாயா ?' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா ?' என்று கூறுவது :

(அ) இனமொழி விடை (ஆ) வினா எதிர் வினாதல் விடை

(இ) நேர் விடை (ஈ) மறை விடை

49. 'மகுளி' என்னும் கரிசல் வட்டார வழக்குச் சொல்லின் பொருள் :

(அ) மேல் கஞ்சி (ஆ) கம்மங்கஞ்சி (இ) சோற்றுக் கஞ்சி (ஈ) வரகுக் கஞ்சி



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

50. ''பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு'' - என்னும் புதுக்கவிதைக்கு உரியவர் :

(அ) தபுசங்கர் (ஆ) வைரமுத்து
(இ) அம்சப் பிரியா (ஈ) உமா மகேஷ்வரி

51. வெட்சிப் பூவின் மறுபெயர் :

(அ) மல்லிகைப்பூ (ஆ) இட்லிப்பூ (இ) சங்குப்பூ (ஈ) முல்லைப்பூ

52. தமிழக வடஎல்லை மீட்புப் போராட்டத்திற்காக ம.பொ. சிவஞானத்திற்கு அழைப்பு விடுத்தவர் :

(அ) ம. சங்கரலிங்கம் (ஆ) மங்கலங்கிழார்
(இ) மார்ஷல் நேசமணி (ஈ) தேவசகாயம்

53. சிலப்பதிகாரத்தில் சுருளிமலைக்கு வழங்கப்பட்ட பெயர் :

(அ) திருமால்குன்றம் (ஆ) திருப்பரங்குன்றம்
(இ) சிறுமலை (ஈ) நெடுவேள்குன்றம்

54. சரியான அகர வரிசையைத் தேர்க.

(அ) செந்நாய், நியதி, யாழ், வெய்யோன்
(ஆ) வெய்யோன், நியதி, செந்நாய், யாழ்
(இ) நியதி, வெய்யோன், செந்நாய், யாழ்
(ஈ) யாழ், செந்நாய், வெய்யோன், நியதி

55. மா. இராமலிங்கம் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் :

(அ) இனிக்கும் நினைவுகள் (ஆ) எங்கெங்கு காணினும்
(இ) யாதுமாகி நின்றாய் (ஈ) புதிய உரைநடை

56. இரண்டாம் இராசராசனது மெய்க்கீர்த்தியில் 'பிறழ்ந்தொழுகுவன' என்று குறிப்பிடப்படுவது :

(அ) இளமான்கள் (ஆ) கயற்குலம் (இ) வண்டுகள் (ஈ) மாமலர்கள்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

57. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | கொல்லாமை | (i) | முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
| (2) | வென்றவர் | (ii) | தொடர்மொழி |
| (3) | கேடு | (iii) | வினையாலணையும் பெயர் |
| (4) | மாலா பாடினாள் | (iv) | எதிர்மறைத் தொழிற்பெயர் |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)

(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

58. "பொய்கையிடம் போனால்
குளிர்ந்து போகிறாய்
பூக்களைத் தொட்டால்
நறுமணத்தோடு வருகிறாய்" - இப்பாடல் வரிகளை எழுதியவர் :

(அ) அப்துல் ரகுமான் (ஆ) மு. மேத்தா

(இ) நா. காமராசன் (ஈ) கவி.கா.மு. ஷெரீப்

59. 'நெட்டுருப் பண்ணினாள் நீதிநூல் திரட்டையே' என்று பாடியவர் :

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) சுரதா (ஈ) வாணிதாசன்

60. கலிவெண்பாவின் அடி வரையறை :

(அ) பதின்மூன்று அடிக்கு மேல் (ஆ) பத்து அடிகள்

(இ) பன்னிரண்டு அடிகள் (ஈ) நான்கு அடிகள்

61. "பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக" - என்று தப்பாட்ட இசை பற்றி குறிப்பிடு நூல் :

(அ) தேவாரம் (ஆ) திருவாசகம் (இ) திருப்புகழ் (ஈ) புறநானூறு



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

62. பின்வரும் நூல்களின் அடிகள்/பாடல்களின் எண்ணிக்கையை தமிழ் எண்களுடன் பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | முல்லைப் பாட்டு | (i) | கOரு |
| (2) | மலைபடுகடாம் | (ii) | ௲சாகரு |
| (3) | பெருமாள் திருமொழி | (iii) | கOரு |
| (4) | தேம்பாவணி | (iv) | ருஅ௲ |

(அ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)
(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

63. "கறங்கு இசை விழவின் உறந்தை" என்று தற்போதைய திருச்சி மாவட்டத்தின் உறையூரைக் குறிப்பிடும் நூல் :

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) சிலப்பதிகாரம் (ஈ) நற்றிணை

64. 'Paradox', 'Oxymoron' - ஆகிய சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.

(அ) முரண்படு மெய்ம்மை, சொல்முரண்
(ஆ) இணை ஒப்பு, எதிரிணை இசைவு
(இ) உச்சநிலை, இணை ஒப்பு
(ஈ) எதிரிணை இசைவு, உச்சநிலை

65. உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடியவர் :

(அ) பெரியாழ்வார் (ஆ) நம்மாழ்வார்
(இ) குலசேகராழ்வார் (ஈ) பொய்கையாழ்வார்

66. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | அவை | (i) | படர்க்கை வினை |
| (2) | படித்தனர் | (ii) | தன்மை வினை |
| (3) | நடந்தாய் | (iii) | படர்க்கைப் பெயர் |
| (4) | வந்தோம் | (iv) | முன்னிலை வினை |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)
(ஆ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)
(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(ஈ) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

67. சீனாவில் சிவன் கோவிலைக் கட்ட ஆணையிட்ட சீனப் பேரரசர் :
(அ) கன்பூசியஸ் (ஆ) குப்லாய்கான் (இ) மா சே துங் (ஈ) சூயென்லாய்

68. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" - இப்பாடலின் ஆசிரியர் :
(அ) மாணிக்க வாசகர் (ஆ) சுந்தரர்
(இ) அப்பர் (ஈ) திருஞானசம்பந்தர்

69. பொருந்தாச் சொல்லைத் தேர்க.
(அ) வாழ்க்கை (ஆ) ஆளல் (இ) நடத்தல் (ஈ) பைங்கூழ்

70. பொருத்தி விடை தேர்க.

| புலவர் | | கூற்று | |
|---|---|---|---|
| (1) | ஆலூர் மூலங்கிழார் | (i) | நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை |
| (2) | ஏணிச்சேரி முடமோசியார் | (ii) | வலிமை குறைந்தாரோடு போர் செய்தல் கூடாது |
| (3) | நல்லந்துவனார் | (iii) | செல்வத்துப் பயனே ஈதல் |
| (4) | நக்கீரனார் | (iv) | பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(ஆ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)
(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(i), (4)-(iv)
(ஈ) (1)-(iv), (2)-(i), (3)-(iii), (4)-(ii)

71. பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் :
(அ) திருவாரூர் (ஆ) எட்டயபுரம்
(இ) திருமறைக்காடு (ஈ) திருச்செந்தூர்

72. பஞ்சுரப்பண், செவ்வழிப்பண் - கருப்பொருள்களின் நிலங்கள் முறையே :
(அ) பாலை, நெய்தல் (ஆ) முல்லை, நெய்தல்
(இ) நெய்தல், பாலை (ஈ) நெய்தல், முல்லை

73. தகவல்களைக் கொடுத்தால் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கித் தரும் மென்பொருள் :
(அ) இலா (ஆ) பெப்பர் (இ) வேர்டுஸ்மித் (ஈ) வாட்சன்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

74. அஞ்சும் அறியான் அமைவிலன் ____________
தஞ்சம் எளியன் பகைக்கு - இக்குறட்பாவில் விடுபட்ட சொல்லைத் தேர்க.
(அ) தான்துவ்வான் (ஆ) ஈகலான் (இ) ஒன்னார் (ஈ) அவரும்தாம்

75. ''மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே''
- என ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்கு இலக்கணம் கூறும் நூல் :
(அ) தொல்காப்பியம் (ஆ) நன்னூல்
(இ) யாப்பெருங்கலக்காரிகை (ஈ) தண்டியலங்காரம்

76. பாலசரஸ்வதியின் நாட்டியத்தைப் பாராட்டியவர் :
(அ) பண்டிட் ஜவகர்லால் நேரு (ஆ) இந்திரா காந்தி
(இ) பத்மா சுப்பிரமணியம் (ஈ) பண்டிட் இரவிசங்கர்

77. கொடுக்கப்பட்ட முழுத் தொடரையும் எதிர்மறையாக மாற்றுக.
அருகில் அமர்க.
(அ) அருகில் நிற்க (ஆ) தொலைவில் அமர்க
(இ) தொலைவில் நிற்க (ஈ) அருகில் அமராதே

78. பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்க.
(i) விளியைத் தொடர்ந்து பெயர் அமைவது விளித்தொடர்
(ii) முற்றுப்பெறாத வினை, பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சத் தொடர்
(iii) முற்றுப்பெறாத வினை, வினைச் சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத் தொடர்
(iv) வேற்றுமை உருபுகள் மறைந்து அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(அ) (i) மற்றும் (ii) மட்டும் (ஆ) (iii) மற்றும் (iv) மட்டும்
(இ) (i) மற்றும் (iv) மட்டும் (ஈ) (ii) மற்றும் (iii) மட்டும்

79. 'மொழிபெயர்த்தல்' என்ற தொடரைப் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடும் இயல் :
(அ) பிறப்பியல் (ஆ) உருபியல் (இ) மரபியல் (ஈ) புணரியல்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

80. ''உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்'' - என்ற இப்பாடலடிகளின் கூற்றுக்குரியவரைத் தேர்க.

(அ) எலிசபெத் அம்மையார் (ஆ) கருணையன்
(இ) சூசையப்பர் (ஈ) தோமையன்

81. சந்திப் பிழையற்ற வாக்கியத்தைத் தேர்க.

(அ) ஒரு மொழியின் குப்பைகள் இன்னொரு மொழிக்கு போய்விட கூடாது.
(ஆ) கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள்.
(இ) மொழிபெயர்ப்பினால் புதியச் சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.
(ஈ) மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கிய திறனாய்வு கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம்.

82. தவறான பொருத்தத்தைத் தேர்க.

(அ) ''பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்'' - குறுந்தொகை
(ஆ) ''பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்'' - கம்பராமாயணம்
(இ) ''விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண'' - புறநானூறு
(ஈ) ''தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்'' - சிலப்பதிகாரம்

83. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளின் வேறு பெயர் :

(அ) வசன கவிதை (ஆ) உரைநடைப் பாட்டு
(இ) உரை மடைப்பாட்டு (ஈ) உரைப்பாட்டு மடை

84. ''அறியேன்'' என்ற சொல்லுக்குரிய சரியான பகுப்புமுறை :

(அ) அறி(ய்) + ஏ + ன் (ஆ) அறி + ய் + ஆ + ஏன்
(இ) அறிய + ஏன் (ஈ) அறி + ய் + ஏன்

85. திருப்பாவை, திருவெம்பாவை பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்து முடிசூட்டு விழாவில் பாடும் நாடு :

(அ) மலேசியா (ஆ) ஜப்பான்
(இ) தாய்லாந்து (ஈ) சிங்கப்பூர்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

86. பொருந்தாத ஒன்றைத் தேர்க.

(அ) காடைக்கண்ணி (ஆ) குண்டுச்சம்பா

(இ) குதிரைவாலி (ஈ) வரகு

87. சரியான முறையில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.

(அ) தமிழரின் உண்ணாமை என்பது தனித்து விருந்தோம்பல் பண்பின் அடிப்படை

(ஆ) விருந்தோம்பில் பண்பின் அடிப்படை தமிழரின் தனித்து உண்ணாமை என்பது

(இ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை

(ஈ) தமிழரின் விருந்தோம்பல் என்பது தனித்து உண்ணாமை பண்பின் அடிப்படை

88. தொடர்களையும் அதற்குரிய நூல்களையும் தேர்க.

| | தொடர்கள் | | நூல்கள் |
|---|---|---|---|
| (1) | கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே! | (i) | ஐங்குறுநூறு |
| (2) | ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர் | (ii) | அகநானூறு |
| (3) | கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை | (iii) | புறநானூறு |
| (4) | கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை | (iv) | சிலப்பதிகாரம் |

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(ஆ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)

(இ) (1)-(iv), (2)-(ii), (3)-(iii), (4)-(i)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

89. "முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத

முனிவு ஈர்ப்ப ......" என்னும் பாடலடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்க.

(அ) பயம் (ஆ) வியப்பு (இ) சினம் (ஈ) ஐயம்

90. கண்ணிற்கு காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர் :

(அ) பாங்கர் மலர் (ஆ) பலா மலர் (இ) பூளை மலர் (ஈ) கள்ளி மலர்



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

91. கூற்று-1 : தேவராட்டத்தில் எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது.

கூற்று-2 : மாதவி ஆடிய ஆடல் வகைகள் பன்னிரண்டு ஆகும்.

கூற்று-3 : மயிலாட்டத்தில் 'கம்பீரத்துடன் ஆடுதல்' என்பது தனிச்சிறப்பானது.

(அ) கூற்று 1 தவறு; கூற்று 2 மற்றும் 3 சரியானவை.

(ஆ) கூற்று 1 சரி; கூற்று 2 மற்றும் 3 தவறானவை.

(இ) கூற்று 1, 2 சரியானவை; கூற்று 3 தவறானது.

(ஈ) கூற்று 1, 2 தவறானவை; கூற்று 1 சரியானது.

92. ''அறப்பணி ஓய்வதில்லை

ஓய்ந்திடில் உலகமில்லை'' - இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் தொகுப்பு :

(அ) மீட்சி விண்ணப்பம் (ஆ) குயில் பாட்டு

(இ) கோடை வயல் (ஈ) ஓர் இரவு

93. 'பஞ்சபூதங்களின் அறிவியல் கதைகள்' என்னும் நூலின் ஆசிரியர் :

(அ) ச. தமிழ்ச் செல்வன் (ஆ) ச. முகமது அலி

(இ) திலகவதி (ஈ) நீலமணி

94. 'கானடை' என்னும் சொல் பிரிபடும் முறைகளில் சரியானவற்றைத் தேர்க.

(1) கா + னடை

(2) கான் + அடை

(3) கான் + நடை

(4) கால் + நடை

(அ) (2), (3) மட்டும் (ஆ) (1), (2), (3) மட்டும்

(இ) (2), (3), (4) மட்டும் (ஈ) அனைத்தும் சரி

95. 'எச்சரிக்கையாக இரு பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்'. - இக்குறிப்புகளுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்க.

(அ) அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான் என்பரியும் ஏதிலான் துப்பு.

(ஆ) தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.

(இ) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு.

(ஈ) அறனினும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

96. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | Aesthetics | (i) | தொன்மம் |
| (2) | Tempest | (ii) | ஒப்பெழுத்து |
| (3) | Myth | (iii) | அழகியல் |
| (4) | Homograph | (iv) | பெருங்காற்று |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)
(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(iv), (2)-(i), (3)-(iii), (4)-(ii)
(ஈ) (1)-(ii), (2)-(iii), (3)-(i), (4)-(iv)

97. "புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" - இப்பாடலடிகள் உணர்த்தும் சரியான கூற்று.
(அ) உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும்
(ஆ) செல்வம் என்பது சிந்தையின் நிறைவு
(இ) நிறைவடைகிறவனே செல்வன்
(ஈ) உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்

98. "நனந்தலை உலகம் ...." என்று தொடங்கும் முல்லைப்பாட்டில் வரும் மன்னனின் பெயர் :
(அ) சேரன் செங்குட்டுவன் (ஆ) மனுநீதிச் சோழன்
(இ) மாவலி (ஈ) பொற்கைப் பாண்டியன்

99. "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" - இக்குறட்பாவில் பயின்று வரும் தொடை நயம்.
(அ) முரண்தொடை (ஆ) அளபெடைத் தொடை
(இ) இரட்டைத் தொடை (ஈ) செந்தொடை

100. "மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து".... என்னும் தொடர் இடம்பெறும் நூல் :
(அ) தென்றல் விடுதூது
(ஆ) குற்றாலக் குறவஞ்சி
(இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்
(ஈ) முக்கூடற்பள்ளு

- o O o -



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com

www.kalviexpress.in www.kalviexpress.in

SPACE FOR ROUGH WORK

www.kalviexpress.in



Send Your Material & Question Paper Our Email ID -Kalviexpress@gmail.com